**செ.வெ.எண்:10** **நாள்:05.08.2025**

# மயிலாடுதுறை மாவட்டம்
# பத்திரிக்கைச் செய்தி

மயிலாடுதுறை மாவட்டம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கிவரும் கொண்டல் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் தமிழ் 1, பணியிடத்திற்கு பள்ளி மேலாண்மைக்குழு மூலம் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் ஆசிரியர் நிரப்பப்பட உள்ளது. தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்வதற்கு விண்ணப்பங்கள் 07.08.2025 வரை வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலமான, விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ உரிய கல்வித்தகுதி சான்றுகளுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் இரண்டாவது தளத்தில் இயங்கி வரும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் 07.08.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் விண்ணப்பிக்கலாம் என மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் திரு.ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மயிலாடுதுறை.**